**சர்வதேச  சிறுவர் புத்தகக் கண்காட்சி- இலக்கிய மாநாடு மற்றும் கலை விழா- 2021**

2021 யூன்  19 முதல் 24 வரை – கொழும்பு பொது நூலக வளாகத்தில் தினமும் மு.ப.  10 மணி முதல் பி.ப.  7 மணி வரை

**இரண்டாவது சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான இலக்கிய மாநாடும் சர்வதேச பயிற்சிப் பட்டறையும்**

2021 யூன் 18,19,20 – ஜேர்மன் கலாச்சார மத்திய நிலையத்தில்

**சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான இலக்கிய விருது வழங்கல் விழா**

2021 யூன் 14-  ஜேர்மன் கலாச்சார மத்திய நிலையத்தில்

**சர்வதேச சிறுவர் புத்தகக் கண்காட்சி- இலக்கிய மாநாடு மற்றும் கலை விழா 2021**

இலங்கையின் வாசிப்புக் கலாச்சாரத்திற்கு புதிய பரிமாணத்தை வழங்கும் வகையில் முதன்முறையாக சர்வதேச சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான புத்தகக் கண்காட்சியொன்றை நடாத்தும் முகமாக ஏற்பாடுகள் நடந்தேறிய வண்ணம் உள்ளன.அரிதாகிக் கொண்டிருக்கும் சிறுவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மீண்டும் நிலைநிறுத்தி அதைப் பரவலாக்கும் முகமாக சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான உள்நாட்டு மற்றும் சர்வதேச நூல்களை அறிமுகப்படுத்துவதே இப் புத்தகக் கண்காட்சி, இலக்கிய மாநாடு மற்றும் கலாச்சார விழாவின் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இக்கண்காட்சியோடு ஒருங்கிணைந்த விதமாக பயிற்சிப்பட்டறைகள்,சம்மேளனங்கள்,கலந்துரையாடல்கள்,நாடகம்,நடனம்,ஓ---வியம் மற்றும் இசை போன்ற பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது.குறித்த பயிற்சிப்பட்டறை மற்றும் மாநாட்டிற்கென சிறுவர் மற்றும் இளைஞர்களின் இலக்கியப் படைப்புத்துறையில் ஈடுபட்டுள்ள எழுத்தாளர்கள், ஓவியர்கள், பதிப்பாசிரியர்கள் மற்றும் அது பற்றி அக்கறை காட்டும் நபர்களை ஈடுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்படுகின்றது .அதேசமயம் சர்வதேச கலாச்சார மையங்களின் உதவியுடன் சிறுவர்களுக்கான பல்வேறுபட்ட செயற்பாடுகளையும் நடாத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இப் புத்தகக் கண்காட்சியானது போலோக்னா,ஷங்ஹாய் மற்றும் ஷாஜா போன்ற சர்வதேச புத்தகக் கண்காட்சிகளின் தர நிலைகளுக்கு சமனானதாய் இருக்கின்ற அதேசமயம் சிறுவர்கள் தாம் சமூக அங்கீகாரம் பெறுவதை உணரச்செய்தல் மற்றும் அவர்களை மென்மேலும் முனைப்புள்ள வாசகர்களாய் மாற்றுவதே இதன் பிரதான நோக்கமாக இருந்து கொண்டிருக்கின்றது.

சர்வதேச சிறுவர் புத்தகக் கண்காட்சி, மாநாடு மற்றும்

கலாச்சார விழா.

செயற்பாட்டு அலுவலகம் – 302,பஹலவெல

வீதி,பெலவத்த பத்தரமுல்ல

**இப்புத்தகக் கண்காட்சி, மாநாடு மற்றும் கலை விழா ஆகியன பின்வரும் அம்சங்களை உள்ளடக்குகின்றன.**

## சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான சர்வதேச புத்தகக் கண்காட்சி

பயிற்சி நூல்கள்,வினா விடைப் புத்தகங்கள் போன்றவை இல்லாமல் வெறுமனே ரசனையையும் வாசிப்பதற்கான அவாவையும் அதிகரிப்பதற்குண்டான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நூல்களை மாத்திரம் காட்சிப்படுத்துவதும் விற்பனை செய்வதுமே இக்கண்காட்சியின் தலையாய நோக்கமாக இருக்கின்றது.அதேசமயம் பிள்ளைகளுக்கு அவர்கள் விரும்பிய நூல்களை இலகுவாகத் தெரிவுசெய்யக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்கவும் அவசியமாய் இருக்கின்றது.அதேபோன்று முழு கண்காட்சிக் கூடமும் வெவ்வேறுபட்ட விசித்திர ஆடைகளை அணிந்த மொடலிங் கலைஞர்கள் மற்றும் பிள்ளைகளை குதூகலப்படுத்துவதற்காகவே பாடுபடும் கதை கூறுபவர்களைக் கொண்டிருக்கும்.இதுவரை நிகழ்த்தப்பட்ட வழமையான புத்தகக் கண்காட்சிகளிலிருந்து விலகி முன்னோக்கி நகரத் துணியும் ஒரு முயற்சியாக இது இருந்துகொண்டிருக்கின்றது.

## சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான இலக்கிய மாநாடு

2019ம் ஆண்டில் IBBY இலங்கை மத்திய நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முதலாவது மாநாடானது பரிணாம வளர்ச்சி கண்டு சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான இலக்கியம் தொடர்புபட்ட எழுத்தாளர்கள், நிர்மாணக் கலைஞர்கள், பதிப்பாசிரியர்கள் மற்றும் வெளியீட்டாளர்களின் அறிவானது தேசிய, சர்வதேச நிபுணர்களுடன் நேரடி மற்றும் நேரடியற்ற ஊடக வலையமைப்பைப் பயன்படுத்தி மூன்று தினங்களாக நடைபெறும்.இம் மாநாட்டுக்கான தரப்பினர்கள் விண்ணப்பம் கோரலின் மூலம் தெரிவுசெய்யப்படும்.

## நூறு நூல்கள் திட்டம், சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான இலக்கிய விருது வழங்கல் விழா

கடந்த 10 வருட காலப்பகுதியில் வெளியிடப்பட்ட சிறந்த தரத்திலான சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான 100 நூல்களைத் தெரிவு செய்து கௌரவப்படுத்தவும் விசேட விருதுகள் மற்றும் பணப்பரிசுகளுக்காக (**சிறந்த சிறுவர் நூல்,இளைஞர்களுக்கான சிறந்த இலக்கிய நூல், சிறந்த ஓவிய நூல்**) மூன்று நூல்கள் வீதம் தெரிவு செய்யவும், குறிப்பிட்ட அந்நூல்களை சர்வதேச ரீதியாக விளம்பரப்படுத்தவும், சர்வதேச விவரத் திரட்டுக் கையேடொன்றைத் தொகுப்பதற்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.இப் பணியைச் சரியானதும் ஏற்றுக்- -கொள்ளப்பட்ட தரநிலைகளுக்கு அமையவும் நிறைவேற்ற கீழ்வரும் அமைப்புக்களின் பங்களிப்பு கிடைக்கப் பெறும்.

- கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டு ஆலோசனைச் சபை மற்றும் நூல் அபிவிருத்தி சபை
- கொழும்பு பொது நூலகம்
- தேசிய நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானங்கள் நிறுவனம்,கொழும்புப் பல்கலைக்கழகம்
- ரூம் டு ரீட் நிறுவனம்

சர்வதேச சிறுவர் புத்தகக் கண்காட்சி, மாநாடு

மற்றும் கலாச்சார விழா

செயற்பாட்டு அலுவலகம் – 302,பஹலவெல

வீதி,பெலவத்த பத்தரமுல்ல

**கலை விழா**

புத்தகக் கண்காட்சியுடன் ஒருங்கிணைந்ததாய் பல்வேறுபட்ட கலை மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் பல ஏற்பாடு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.அவைகளில் முதன்மையானவைகளாவன:

- சர்வதேச கலாச்சார நிறுவனங்களின் அனுசரணையுடன் நாள் பூராவும் வெளிப்புறங்களில் நடைபெறும் வெவ்வேறுபட்ட சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான செயற்பாடுகள்
- சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான சர்வதேச திரைப்பட விழா
- நாடக அரங்கேற்றம்
- இசைக்கச்சேரி
- ஓவியக் கண்காட்சி மற்றும் அதனுடன் தொடர்புபட்ட செயற்பாடுகள்
- சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான விரிவுரைகள்/ கலந்துரையாடல்கள்
- சிறுவர் மற்றும் இளைய எழுத்தாளர்கள், ஓவியக் கலைஞர்கள் மற்றும் வெளியீட்டாளர்களுடனான சந்திப்புக்கள்

**பணிப்பாளர் புத்தகக் கண்காட்சி, எம்.சபீர்**

நூல் வெளியீட்டுத் துறையில் 22 வருடங்களாக பணிபுரியும் நான் எந்நேரமும் சிந்தித்தது இத்துறையில் எவ்வாறு புதிய பரிமாணமொன்றை கண்டெடுக்கலாம் என்பதேயாகும்.நான் எவ்வேளையும் முயற்சி செய்தது நாம் வெளியிடும் நூல்கள் சமூகத்துக்கு மறுமலர்ச்சியையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்த வேண்டும் என்பதேயாகும்.இற்றைக்கு பல வருடங்களுக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட நூல் வெளியீட்டுத் துறையில் சர்வதேச ரீதியான அனுபவங்களைப் பெறும் வேளை நான் புரிய முற்பட்டது என்னவென்றால் உலகளாவிய மட்டத்தில் மிகவும் வளர்ச்சி கண்டுள்ள நூல் வெளியீட்டுத் துறையை நம் நாட்டைப் போன்ற சிறியதொரு நாட்டில் எவ்வண்ணம் விருத்தி செய்யலாம் என்பதேயாகும்.அவ்வாறு சிந்தித்த வேளை இந்நாட்டு சிறுவர் மற்றும் இளைஞர் சமூகங்களுக்கிடையில் வாசிப்புப் பழக்கம் ஊக்குவிக்கப்பட்டு விருத்தி செய்யப்படுமேயானால் அது ஒரு சிறந்த ஆரம்பமாய் அமையும் என எனக்குத் தோன்றியது.அதன்படி இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் நூல் வெளியீட்டுத் தொழிற்துறையில் ஈடுபட்டிருந்த சுமார் 15பேர்களைக் கொண்ட குழுவொன்று ஒன்றிணைந்து எதிர்கால புத்தகத் தொழிற்துறை மற்றும் வாசகர்களுக்காக மேற்கொள்ளக்கூடிய தலையீடுகள் பற்றிய வெவ்வேறுபட்ட கலந்துரையாடல்கள், விவாதங்கள், திட்டங்கள் மற்றும் அறிவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன.அதில் முதன்மையான ஒரு பரிந்துரை என்னவெனில் வாசிப்பை ஊக்கமளித்து விருத்திசெய்யாத பட்சத்தில் இலக்கிய மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியாதென்பதேயாகும்.அதற்கு மாற்றீடாக வேண்டி ஒரு முயற்சியாக சர்வதேச அளவிலான சிறுவர் மற்றும்

இளைஞர்களுக்கான புத்தகக் கண்காட்சியொன்று முதன்முறையாக செய்யப்படவேண்டும் என்ற பரிந்துரையானது அங்கீகரிக்கப்பட்டது.அப் பரிந்துரையானது தற்போது மென்மேலும் விசாலமாகி விருத்தியடைந்து பாரிய தேசிய பணியாக பரிணமிக்கப் போகின்றது.ஆதலால் நாம் முயற்சி செய்வது எழுத்தாளர்,வாசகர் மற்றும் வெளியீட்டாளர்களை வலுவூட்டி புத்தகம் வாசிக்கும் புதிய கலாச்சாரத்தை கட்டியெழுப்புவதற்கேயாகும்.அனைவரினதும் சக்தியும் தைரியமும் எமக்கு கிடைக்கும் என நம்புகின்றோம்.அதன் மூலம் எங்களுக்கு புதிதாய் புத்தகம் வாசிக்கும் கலாச்சாரத்தை ஏற்படுத்த முடியுமாய் இருக்கும்.


சர்வதேச சிறுவர் புத்தகக் கண்காட்சி, மாநாடு

மற்றும்  கலாச்சார விழா

செயற்பாட்டு அலுவலகம் – 302,பஹலவெல

வீதி,பெலவத்த பத்தரமுல்ல


**IBBY இலங்கை நிறுவனத்தின் தலைவர்,தினேஷ் குலதுங்க.**

இளைஞர்களுக்கான சர்வதேச நூல்கள் சபையின்( IBBY) நோக்கம் என்னவெனில் நூல்களையும் சிறுவர்களையும் ஒன்றிணைப்பதேயாகும்.சிறுவர்களினதும் இளைஞர்களினதும் கையில் வாசிப்பதற்கு நூல்களைக் கொண்டு சேர்ப்பது அவர்களின் கல்வி மற்றும் ஒழுக்க மேம்பாட்டில் இன்றியமையாத விடயமாகக் காணப்படுகின்றது .வெளியுலகைப் பற்றிய மிகவும் பரந்துபட்ட புரிந்துணர்வை இளைஞர்களிடையே கொண்டுவருவதன் மூலம் சர்வதேச ரீதியான புரிதலையும் நட்புறவையும் வளர்ப்பதனூடாக சமாதானத்தின் பணியைச் செய்யும் ஆற்றலும் புத்தகங்களுக்கு இருக்கின்றது என்பதை நாம் ஆணித்தரமாக நம்புகின்றோம்.

IBBY தேசிய கிளையானது தன் அங்கத்துவ கூட்டமைவைக் கொண்டு தனது பிரதிநிதித்துவத்தை நியாயப்படுத்தல் அவசியமாகும்.மேலும் முன்மாதிரியான முறையில் சிறுவர் இலக்கியம் தொடர்புபட்ட அனைத்து பிரிவினர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தல் அவசியமாகும்.அவ்வாறான பிரிவினர்களாவன: இலக்கிய நூல்கள் பற்றிப் பொறுப்புள்ள அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள்,வெளியீட்டாளர்கள்,நூலாசிரியர்கள்,ஓவியக் கலைஞர்கள், நூலகர்கள், புத்தக வியாபாரிகள்,ஆசிரியர்கள்,ஆய்வாளர்கள், புத்தக மேம்படுத்துநர்கள் மற்றும் புத்தக மேம்படுத்தலில் ஈடுபட்டுள்ள அரச அலுவலர்கள் ஆகியோர்களாவர்.சில நாடுகளில் IBBY அமைப்பின் தேசிய கிளையானது சிறுவர் நூல்களை மேம்படுத்தும் பணியில் குறித்த நாடுகளின் ஒரேயொரு அதிகாரபூர்வமான மேம்படுத்துநராக இருக்கின்றது.வேறு நாடுகளில் இக்கிளையானது பல்வேறுபட்ட நிறுவனங்களோடு இணைந்து தேசிய மட்டத்தில் செயற்படுகின்றது.இந்த இலக்கிய மாநாடு, கண்காட்சி மற்றும் விருது வழங்கல் விழா போன்றவற்றுக்கான ஏற்பாட்டு ரீதியான

பங்களிப்பு மற்றும் முன்னிலை வகித்தல் போன்றவைகள் மூலம் IBBY நிறுவனத்தின் மேற்குறிப்பிட்ட குறிக்கோளை அடைந்தது போன்றதாகும் .

வாசிப்பின் மூலம் பரந்த அறிவையும் விமர்சன ரீதியான ஞானத்தையும் பெற்றுக்கொள்வதனால் கல்வி நடவடிக்கையில் சிறந்த பெறுபேற்றை இலகுவாகப் பெற முடியும் என்பதை சில பெற்றோர்கள் விளங்காதபடியால் கதைப் புத்தகங்கள் மற்றும் இளைஞர்களுக்கான நாவல்கள் போன்றவற்றை வாசிப்பதற்குத் தூண்டாமல் வெறுமனே பாடப் புத்தகங்களை மாத்திரம் வாசிப்பதற்கு பிள்ளைகளுக்கு பெற்றோர் இடமளிக்கின்றனர்.

எனினும் அவ்வாறு பலதரப்பட்ட நூல்களை வாசிக்கும் சிறுவன் சமூகம், சூழல்,கலாச்சாரம் மற்றும் தேசிய உரிமைகள் பற்றிய அறிவை வளர்த்துக்கொண்டும் அடிப்படை விழுமியங்களை சுதாகரித்துக் கொண்டும் சமூகத்துக்கு ஒரு அர்த்தபூர்வமான நபராக பரிணமிக்கின்றான்.இன்னொரு விதத்தில் கூறுவோமெனின் வாசிப்பு ஒரு மனிதனை முழு மனிதனாக்குகின்றது.இவ்வாறான கருத்துக்களையும் அறிவையும் சமூகத்துக்கு அடிக்கடி நினைவுபடுத்துவதானது நம்மனைவரினதும் விசேடமாக ஊடகங்களினதும் தேசிய ரீதியான முக்கியமான கடமையும் பொறுப்பும் என நாம் நம்புகின்றோம்.

சர்வதேச சிறுவர் புத்தகக் கண்காட்சி, மாநாடு

மற்றும்   கலாச்சார விழா

செயற்பாட்டு அலுவலகம் – 302,பஹலவெல

வீதி,பெலவத்த பத்தரமுல்ல